புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டு, தற்போது அங்கே கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே விடுதி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

புதிய திருத்தேர்

***33856—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய திருத்தேர் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், ஜெயங்கொண்டான் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஒரு கால பூஜை நிதியுதவித் திட்டத்தின்கீழ், தினசரி ஒரு கால பூஜை நடைபெற்றுவரும் சிறிய கோயிலாகும். இதன் ஆண்டு வருமானம்

2016 ஜனவரி 23]

ரூ.54,000/- மட்டுமே. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பழைய திருத்தேர் ஏதும் தற்போது இல்லை. மேலும், தேரோடும் வகையில் அகன்ற வீதிகளும் இல்லை. இருப்பினும், எதிர்காலத்தில் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, தேரோடும் வாய்ப்புகளை உருவாக்கித் தரும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

பேருந்து வசதி

***52006 திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடிப் பேருந்து வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடியாகப் பேருந்து போகின்ற அளவுக்குப் போதுமான பயணிகள் இல்லாத காரணத்தினால், இது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.